DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.133 /2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 7

LW - 6

Name : **போத்திராஜ்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : **02.12.2025**

6. **( A 1 produced. A2 produced through V.C. A3 to A7 present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது இராஜபாளையத்தில் குடியிருந்து கழிவு பஞ்சு வேலை செய்து வருகிறேன். கடந்த 27.08.2015 ம் தேதி காலை 11.00 மணியளவில் எனது அண்ணன் நடராஜன் என்பவரின் வீட்டு முன்பு நின்று கொண்டிருந்தபோது சிவகிரி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்த்ததற்காக என்னிடமும், முருகேசன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதன் பின்பு போலிசார் வீட்டிற்குள் சென்று அருவாளை அத்தாட்சியுடன் கைப்பற்றி , கைப்பற்றியதற்காக என்னிடமும், முருகேசனிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ .சா.ஆ.8** ஆகும்.

இந்த வழக்கு பற்றி போலிசார் என்னிடம் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்ததில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கின் கு.எண் , சட்டப்பிரிவு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து வாங்கும்போது என்னை விசாரித்தார்கள் ஆனால் அதன் பின்பு விசாரிக்கவில்லை. சம்பவ சமயத்தில் எனது குடியிருப்பு இராஜபாளையத்தில் இருந்தது. இந்த வழககு சம்மந்தமாக சிவகிரி நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல போனேனா என்றால் இல்லை. நடராஜன் என்பவர் எனது அண்ணன் முறை ஆகும். நடராஜன் என்பவர் எனது அண்ணன் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசன் என்பவர் யார் என்று தெரியாது. 2 தாள்களில் மட்டும் கையொப்பம் வாங்கினார்கள். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அதன் பின்னிட்டு என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துப் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.133 /2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 8

LW - 8

Name : **சுப்புராஜ்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : **02.12.2025**

7. **( A 1 produced. A2 produced through V.C. A3 to A7 present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது ரெட்டியப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 16.09.2016 அன்று தென்மலை கிராமத்திற்கு விவசாய வேலைக்காக சென்று கொண்டிருந்தபோது அன்றைய தினம் மதியம் சுமார் 2.00 மணியளவில் சிவகிரி காவல் ஆய்வாளர் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் 1 எதிரி மற்றும் 2 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.9** மற்றும் **அ.சா.ஆ.10** ஆகும். அந்த இடத்தில் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 16.09.206 ம் தேதியன்று என்னை போலிசார் விசாரித்ததில் நானும் எனது நண்பர் வாழை குருசிவன் என்பவரும் தென்மலைக்கு சொந்த வேலையாக சென்றிருந்ததாகவும், சிவகிரி காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் 1 ம் எதிரியான சீனி மாரியப்பன் , மற்றும் 2 ம் எதிரி கார்த்திக் ஆகியோர்களை கைது செய்ததாகவும், இந்த வழக்கின் சம்பவம் குறித்து எவ்வித துன்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 எதிரிகள் மீதும் வெவ்வேறு திருட்டு வழக்குகள் இருப்பதாகவும் தானும், இந்த வழக்கில் உள்ள மற்ற எதிரிகளும் 26.08.2016 ம் தேதி இரவு 8.30 மணிக்கு சங்கரன்கோவில் – இராஜபாளையம் மெயின் ரோட்டில் , பி ரெட்டியபட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் காம்பவுன் சுவர் ஏறி உள்ளே குதித்ததாகவும், அங்கே இருந்த பெரியவரை வெட்டி காயப்படுத்தியதாகவும், அந்த வீட்டில் இருந்த அம்மாவிடம் அவர் போட்டு இருந்த 4 பவுன் தங்க தாலியை கழற்றியதாகவும், அதன் பின்னர் சுமார் 4 பவுன் தங்க செயின், சுமார் 1 பவுன் எடையுள்ள தங்க வளையல், சுமார் 1 பவுன் எடையுள்ள ஒரு ஜோடி தங்க தோடு, சுமார் 4 கிராம் எடையுள்ள செயின், சுமார் 2 கிராம் எடையுள்ள பிரேஸ்லெட், மற்றும் ரொக்க பணம் ரூ. 40,000/– மற்றும் 4 செல்போன்களை கொள்ளையடித்துச் சென்றதாகவும், அப்போது சுடலை மணி என்பவர் மட்டும் வெளியே பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அந்த நகையையும், பணத்தையும் மற்ற எதிரியிடம் தலா 2000/– பிரித்துக்கொண்டதகாவும், சீனி மாரியப்பன் மட்டும் தனக்கு பணம் கஷ்டமாக இருக்கிறது என்று கேட்டுக் கொண்டதால் அந்த நகையில் இருந்து 4 பவுன் தங்க செயின் 1 பவுன் வளையல், 2 கிராம் பிரேஸ்லெட் ரொக்க பணம் 7000/– மற்ற 4 செல்போன்களை சீனி மாரியப்பன் தன் வீட்டில் வைத்துக்கொண்டதாகவும், தற்போது தனது கூட்டாளிகளை போலிசார் பிடித்துக் கொண்டதால் அந்த நகைகளையும், அருவாள், சுத்தியல் ஆகியவற்றை ஒரு

பேக்கில் எடுத்துக் கொண்டு நானும், கார்த்திக்கும், ரெட்யப்பட்டி அருகே வந்து விடலாம் அங்கே வந்து இன்னும் பெண்களிடம் நகைகளை பறித்துக்கொண்டு பாம்பேயில் செட்டிலாகிவிடலாம் என்று சொல்லி பருவக்குடி முக்கில் வந்த அங்கியிருந்து இரண்டு சக்கர வாகனத்தில் தென்மலை ரோட்டில் வரும்போது தங்களை போலிசார் பிடித்துக்கொண்டதாகவும், அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி சீனி மாரியப்பனிடமிருந்த இந்த வழக்கின் சம்பவத்திற்கு பயன்படுத்திய பெரிய மரக் கைப்பிடி உடைய வாள் ஒன்று, பெரிய கொம்பு கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று, பெரிய கருப்பு கலர் டிராவல் பேக் –1 அத்தாட்சி மூலம் கைப்பற்றியதாகவும் , அதன் பின்பு வழக்கு சம்மந்தப்பட்ட சுமார் 4 பவுன் தங்க தாலி செயின், சுமார் 1 பவுன் எடையுள்ள வளையல், சிறுபிள்ளை பிரேசிலெட், 4 செல்போன் மற்றும் பணம் ரூ.5000/–யும் என் முன்னால் வைத்து கைப்பற்றியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்து விட்டு தற்போபது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.133 /2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 9

LW - 11

Name : **டாக்டர்.மாரிராஜ்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : **02.12.2025**

8. **( A 1 produced. A2 produced through V.C. A3 to A7 present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.08.2016 அன்று முழு நேர பணியில் இருந்தபோது இரவு 9.00 மணிக்கு நடராஜன் என்பவர் அவரது தம்பி போத்திராஜ் என்பவருடன் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவர் தன்னை 26.08.2016 அன்று இரவு 8.45 மணிக்கு அடையாளம் தெரியாத 7 நபர்கள் தன் வீட்டின் முன்பு கத்தி மற்றும் கம்பால் தாக்கிவிட்டு வீட்டினுள் நுழைந்து அனைவரையும் கட்டி வைத்து திருடி சென்றதாக கூறினார். அவருக்கு இருந்த காயங்கள் 1. வலது நடுவிரலில் 3 1/2 cm தோள் ஆழத்திற்கு சிதைந்த காயம் உரைந்த இரத்தத்துடன் காணப்பட்டது. வலது முதுகில் தோல் ஆழத்திற்கு நேர்கோடான சிதைந்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி செய்து வெளிநோயாளியாக அனுப்பி விட்டேன்.

அவருக்கு ஏற்பட்ட 1,2 காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நடராஜன் என்பவர் 27.08.2016 அன்று இரவு 9.00 மணிக்குத் தான் சிகிச்சைக்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லப்படும் நாள் 26.08.2016 இரவு 8.45 மணிக்கு என்றால் சரிதான். அவர் 24 மணி நேரம் கழித்து தான் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்னால் வேறு எங்கேயாவது முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தாரா என்றால் அதற்குரிய அறிகுறி எதுவும் இல்லை. அவர் 24 மணி நேரம் கழித்து என்னிடம் தாமதமாக சிகிச்சைக்கு வந்ததற்கு காரணம் எதுவும் சொன்னாரா என்றால் நான் கேட்கவில்லை. நடராஜனுக்கு ஏற்பட்ட காயங்களில் முதலாவது காயம் காய்கறி நறுக்கும் போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இரண்டாவது காயம் சுவரில் உள்ள ஆணியில் பட்டு காயம் ஏற்பட்டால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்ற விவரம் துலங்குமா என்றால் துலங்காது . நடராஜனுக்கு ஏற்பட்ட காயங்கள் 2ம் சாதாரண காயங்கள் என்றால சரிதான். நடராஜனுக்கு காயங்கள் அவரே ஏற்படுத்திக் கொண்டு அதை எதிரிகள் ஏற்படுத்தியதாக பொய்யாக கூட சொல்லியிருக்கலாம் என்றால் காயம் எதனால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** – இல்லை

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.